பக்கங்கள் 15+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 08 செவ்வாய்க்கிழமை 23.12.2025 | அதிர்வு 146

## யாழ்தேவி ரயில் மோதி குடும்பஸ்தர் மரணம்!




யாழ் தேவி ரயில் மோதி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து இன்று முகமாலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. 06▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# பேரிடர் மீட்புக்கு இந்தியா 13,500 கோடி ரூபா உதவி!

## பிரதமர் மோடியின் விசேட தூதர் ஜெய்சங்கர் இலங்கை ஜனாதிபதியிடம் நேரில் தெரிவிப்பு

பேரிடர் நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கையை மீட்டெடுக்கும் தனது உதவித் திட்டமாக முதல்கட்டமாக இந்தியா 450 மில்லியன் அமெரிக்க டொலர் (சுமார் 13 ஆயிரத்து 500 கோடி ரூபா) மறுசீரமைப்பு தொகுப்பை இலங்கைக்கு வழங்க முன்வந்திருக்கின்றது.

இந்தியப் பிரதமர் மோடியின் 04▶





# மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்!

## ஜெய்சங்கரிடம் தமிழ்த் தலைவர்கள் ஒரே குரலில் வலியுறுத்து

கொழும்பு வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கரைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள், மாகாண சபைத் தேர்தல்களை இனியும் காலத்தை இழுத்தடிக்காமல் விரைந்து நடத்துமாறு இலங்கை அரசை வற்புறுத்தும்படி ஒரே குரலில் அவரிடம் வலியுறுத்தினர் எனத் தெரியவந்தது.

கொழும்பு இந்திய ஹவுஸில் இன்று பிற்பகல் சுமார் 45 நிமிட நேரம் நீடித்த இந்தச் சந்திப்பின்போது தமிழ் தேசியக் கட்சிகளின் சார்பில் பங்கு பற்றிய எட்டுத் தலைவர்களும் இந்த விடயங்களை ஒருமித்த குரலில் வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கதாகும்.



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவஞானம் சிறீதரன், இரா.சாணக்கியன் மற்றும் ரெலோவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகிய எண்மரே இன்று இந்திய வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்தனர்.

சந்திப்பில் பங்குபற்றிய எல்லோருமே கருத்துக்களை வெளியிட்டனர். பெரும்பாலும் அனைவரும் மாகாண சபைத் தேர்தலை இனியும் இழுத்தடிக்காமல் விரைந்து நடத்தும்படி வலியுறுத்தினர்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக அரசின் நிலைப்பாடு, கருத்து வெளிப்பாடுகள், நாட்டில் உள்ள நிலைமை ஆகியவை குறித்து தமிழ்க் கட்சிகளின் தலைவர்களின் கருத்துக்களை இந்திய வெளிவிவகார அமைச்சர் உன்னிப்பாகச் செவிமடுத்தார்.

ஒற்றையாட்சியின் கீழ் இறுதித் தீர்வு சரிவராது என்பதை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்தச் சந்திப்பில் வலியுறுத்தினார். அதுவே தங்களின் நிலைப்பாடு என்று தெரிவித்த சுமந்திரன், சமஷ்டி அடிப்படையிலான தீர்வு கட்டாயம், ஆனால் அந்த சமஷ்டி கட்டமைப்பு அதில் இருக்க வேண்டுமே தவிர, பெயரை நாங்கள் வற்புறுத்தவில்லை என்றும் குறிப்பிட்டார்.

மாகாண சபை முறைமை இனப் பிரச்சினைக்கான தீர்வு இல்லை என்பதைச் சுட்டிக்காட்டிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஆயினும் இன்றைய நிலையில் மாகாண சபைத் தேர்தல் இழுத்தடிக்காமல் நடைபெற வேண்டும் என்பதைத் தமது கட்சியின் வலியுறுத்துவதாக இந்தச் சந்திப்பில் குறிப்பிட்டார்.

பேரிடர் மீட்பு நிவாரணப் பணிகள் குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் தமிழ்த் தலைவர்களிடம் வினாவினார்.

நாட்டில் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும், உள்ளூராட்சி சபைகளும் இருக்கின்ற அதே சமயம், அவற்றை புறமொதுக்கி, "பிரஜாசக்தி" போன்ற வேறு கட்டமைப்புகள் மூலம் இந்த நிவாரணப் பணிகளை அரசியல்மயமாக்கி, அரசுத் தரப்பு அதில் அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது என்று தமிழ்க் கட்சித் தலைவர்கள் தெரிவித்த விடயங்களை மிக உன்னிப்பாக இந்திய வெளிவிவகார அமைச்சர் உள்வாங்கிக் கொண்டார், விவரங்களைக் கேட்டு அறிந்தார் என்று அறிய வந்தது.









# பேரிடர் பாதிப்பிலிருந்து மீண்டெழ இலங்கைக்கு இந்தியா முழு ஆதரவு

## ஹரிணியிடம் ஜெய்சங்கர் உறுதி

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் விசேட தூதுவராக இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர், இன்று அலரி மாளிகையில் பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரியவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

“டித்வா“ சூறாவளியால் ஏற்பட்ட பேரழிவைத் தொடர்ந்து, இலங்கை மீளக்கட்டியெழுப்பும் பணிகளை ஆரம்பித்துள்ள இத்தருணத்தில், நாட்டின் உயர்மட்டத் தலைவர்களுடன் கலந்துரையாடல்களை முன்னெடுப்பதை நோக்கமாகக் கொண்ட உத்தியோகபூர்வ விஜயத்தின் ஓர் அங்கமாகவே இந்தச் சந்திப்பு அமைந்தது.

இந்தக் கலந்துரையாடலின் போது, இலங்கையில் ரயில் பாதைகள் மற்றும் பாலங்களை மீளக்கட்டியெழுப்புதல், விவசாயத் துறையைப் பலப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு உதவிகளை வழங்குவதற்கு இந்தியா தயாராக இருப்பதை இந்திய வெளிவிவகார அமைச்சர் மீண்டும் உறுதிப்படுத்தினார்.

அத்துடன், வலுவான சட்ட, நிர்வாக மற்றும் நிறுவனக் கட்டமைப்புகளின் ஆதரவுடன், பேரிடர் சூழ்நிலைகளை எதிர்கொள்வதற்கான வினைத்திறன் மிக்க பொறிமுறைகளைக் கொண்டிருப்பதன் முக்கியத்துவத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இரு தரப்பினரும் தற்போதைய நிவாரண முயற்சிகளை மீளாய்வு செய்ததுடன், மீட்பு நடவடிக்கைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் பலப்படுத்துவதற்கான வழிகள் குறித்தும் ஆராய்ந்தனர்.

“டித்வா“ சூறாவளியால் ஏற்பட்ட அழிவுகளுக்குப் பின்னரான மீட்புச் செயற்பாடானது, உடனடி நிவாரண முயற்சிகளுக்கு அப்பால் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மீளக் கட்டியெழுப்புதல் போன்ற நீண்டகால நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது எனக் குறிப்பிட்ட பிரதமர், இதன்போது இந்திய அரசு வழங்கி வரும் தொடர்ச்சியான ஆதரவிற்காகத் தனது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்தார்.

நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதன் ஓர் அங்கமாகவே பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், அவை உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

அனர்த்த நேரத்தின்போது வெளிப்பட்ட மக்களின் ஒற்றுமை, அவர்களின் தன்னார்வத் தொண்டு மற்றும் கூட்டுச் செயற்பாடுகளைப் பாராட்டிய பிரதமர், ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியம், அனர்த்தங்களுக்குள்ளாகும் தன்மையைக் குறைத்தல் மற்றும் பாதுகாப்பு வழிமுறைகளைப் பலப்படுத்துதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.











## பேரிடர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்பு தூதராக நேற்று இலங்கைக்கு வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர் இன்று காலை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்தார். அப்போது இந்தச் சிறப்பு உதவி பற்றிய திட்டம் குறித்த விவரங்களை இலங்கை ஜனாதிபதியிடம் இந்தியப் பிரதமரின் விசேட தூதுவர் தெரிவித்தார்.

இந்த 450 மில்லியன் அமெரிக்க டொலர் உதவித் தொகுப்பில் 350 மில்லியன் அமெரிக்க டொலர் சலுகைக் கடன் வசதிகளைக் கொண்டது. மிகுதி 100 மில்லியன் அமெரிக்க டொலரும் மானியங்களாக வழங்கப்படும்.

இந்தத் தொகுப்பு இலங்கை அரசாங்கத்துடன் நெருக்கமான ஆலோசனைகளின் பின்னர் இறுதி செய்யப்படுகின்றது என்று தெரிவித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர், பாதிக்கப்பட்ட இலங்கைக்கு உதவி வழங்க இந்தியா முன்னுரிமை கொடுத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் இன்று காலை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட விசேட கடிதத்தையும் கையளித்தார்.

டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களின் நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு முயற்சிகளுக்கும், இயல்பு வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கும் இந்தியப் பிரதமரும் இந்திய அரசாங்கமும் அளித்த மனப்பூர்வமான ஆதரவை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நன்றியுடன் பாராட்டினார்.

மீட்புப் பணிகளுக்கு ஹெலிகள், மருந்துகள், உணவுப் பொருட்கள் உள்ளிட்ட மனிதாபிமான உதவிகளை வழங்குவதிலும், சேதமடைந்த வீதிகளை மீளமைப்பதிலும், மகியங்கனை வைத்தியசாலை உள்ளிட்ட வைத்தியசாலை கட்டமைப்பை மறுசீரமைப்பதிலும் இந்திய அரசாங்கம் அளித்த விசேட ஆதரவையும் ஜனாதிபதி நன்றியுடன் நினைவு கூர்ந்தார்.

ஒவ்வொரு கடினமான சமயத்திலும் இந்தியா இலங்கைக்கு வழங்கி வரும் தொடர்ச்சியான ஆதரவை ஜனாதிபதி ஞாபகமூட்டியதோடு பேரழிவுக்குப் பிறகு இலங்கையின் மீளமைப்பு செயற்பாட்டுக்கு வழங்கும் ஒத்துழைப்பு இந்திய – இலங்கை உறவுகளில் ஒரு புதிய அத்தியாயத்தைக் குறிக்கும் என்றும் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கடினமான சமயத்தில் இலங்கையுடன் பலமாக இணைந்திருக்கவும், இலங்கையை மீளக்கட்டியெழுப்பும் பணிகளுக்கு சாத்தியமான அனைத்து உதவிகளை வழங்கவும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனக்கு அறிவுறுத்தியதாகவும், அந்த முயற்சிகளை ஆராய்வதற்காக இந்தியப் பிரதமரின் சிறப்பு பிரதிநிதியாக இலங்கைக்குத் தான் விஜயம் மேற்கொண்டதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சருக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பைத் தொடர்ந்து, இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு பேச்சுகள் ஆரம்பமானதோடு , இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் விரிவுபடுத்துவதில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. குறிப்பாக இலங்கையின் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு தொடர்ந்து ஆதரவு வழங்கப்படும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கைக்கு இந்தியா வழங்கிய சலுகைப் பொதியை அடையாளப்படுத்தும் வகையில் கிளிநொச்சி ஏ – 35 வீதியில் உள்ள பேல் பாலத்தை திறந்து வைக்கும் நிகழ்வு, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் இந்திய மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சர்களின் பங்கேற்புடன் ஒன்லைனின் ஊடாக நடைபெற்றது.

ஜனாதிபதிக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சருக்கும் இடையிலான பேச்சுகளில் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ மற்றும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற இருதரப்பு பேச்சுவார்த்தைகளில், இந்திய அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இந்திய வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் புனித் அக்ரவால், இந்தியப் பிரதித் தூதுவர் சத்யஞ்சல் பாண்டே மற்றும் இலங்கை அரசாங்கத்தின் சார்பாக ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் அருணி ரணராஜா, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே ஆகியோர் கலந்துகொண்டனர்.

அதேவேளை, இந்திய வெளிவிவகார அமைச்சர், இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்துடனும் விரிவான பேச்சுக்களிலும் ஈடுபட்டார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## விளையாட்டு விவகாரம்

தேசிய மக்கள் சக்தி அரசு யாழ்ப்பாணத்தில் பழைய பூங்காவில் அமைக்க முற்பட்டிருக்கும் உள்ளக விளை யாட்டு அரங்கு மாத்திரமல்ல, மண் டைதீவில் அமைக்க தயாராகி வரும் யாழ்ப்பாணம் சர்வதேச கிரிக்கெட் மைதானமும் சர்ச்சையை உருவாக்கி இருக்கின்றது. விளையாட்டு அரங்குக ளின் பெயரில் தேசிய மக்கள் சக்தி அரசு யாழ்ப்பாண மக்களின் சுற்றுச் சூழல் விவகாரத்தோடு விளையாடுவ தாகவே தோன்றுகின்றது.

ஏற்கனவே பழைய பூங்காவில் கட்டமைக்க முயற்சிக்கப்படும் உள்ளக விளையாட்டு அரங்கு விவகாரம் நீதி மன்றத்தில் விசாரணையில் நிற்கின் றது. மறுபுறத்தில் இப்போது, மண் டைதீவு தீவில் முன்மொழியப்பட்ட யாழ்ப்பாண சர்வதேச கிரிக்கெட் மைதானம் மற்றும் விளையாட்டு வளாகத்தின் மேம்பாடு சட்டவிரோத மானது மட்டுமல்லாமல், மண்டை தீவின் நொருங்கக்கூடிய நிலையில் இருக்கும் சுற்றுச்சூழல் அமைப்புகள் மற்றும் உள்ளூர் சமூகக் கட்டமைப்புகளுக்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது என்று இலங்கை வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கு எழுதிய உத்தியோக பூர்வ கடிதத்தில் எச்சரித்துள்ளது.

கடல் புல் படுக்கைகள், உப்பு சதுப்பு நிலங்கள் மற்றும் மண்டைதீவு வனப்பகுதி உள்ளிட்ட சுற்றுச்சூழல் ரீதியாக உணர்திறன் வாய்ந்த வாழ் விடங்கள் இந்த இடத்தில் உள்ளன என்பதை அந்தச் சங்கம் தனது கடிதத்தில் விவரித்துள்ளது.

இந்த திட்டத்தின் பின்னணியில் உள்ள அமைப்பான இலங்கை கிரிக்கெட் அமைப்பு, கட்டுமான நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு முன்பு கடலோர பாதுகாப்பு மற்றும் கடலோர வள மேலாண்மை சட்டத்தின் கீழ் சட்டப் பூர்வமாக தேவையான அனுமதிகளைப் பெறவில்லை என்பதை சங்கம் விசனத்துடன் விளக்கியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் ஒரு விளையாட்டு வசதியை உருவாக்குவதற்கு நாம் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. மாறாக, மண்டைதீவு தீவில் இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கும், இலங்கை கிரிக்கெட் சுற்றுச் சூழல் சட்டத்தை பின்பற்றத் தவறியதற்கும் தான் ஆட்சேபனை தெரிவிக்கிறது என்று அந்த அமைப்பு தெளிவுபடுத்தியது. மேலும், தேவையான ஒப்புதல்கள் இல்லாமல் கட்டுமானத்தைத் தொடர்வது கடலோரப் பாதுகாப்பு மற்றும் கடலோர வள மேலாண்மைச் சட்டத்தின் கீழ் சட்டத்தின் தெளிவான மீறலாகும். எனவே, மீளமுடியாத சுற்றுச்சூழல் சேதம் ஏற்படுவதற்கு முன்பு திட்டத்தை நிறுத்த உங்களது உடனடித் தலையீட்டை சங்கம் கோருகிறது என்றும் அந்தக் கடிதத்தில் அது தெரிவித்துள்ளது.

மண்டைதீவு ஒரு இயற்கை வெள்ளத் தடுப்பு மண்டலமாக அமைந்துள்ளது. மழைக்காலங்களில் தொடர்ந்து நீரில் மூழ்கும். யாழ்ப்பாணத்தின் வரையறுக்கப் பட்ட வனப்பகுதியைப் பாதுகாப்பதில் அதன் பங்கு முக்கியமானது. அதனால் இந்தக் கட்டுமானத்திற்கு அது பொருத் தமற்றதாகிறது. கூடுதலாக, மீறிக் கட்டப் பட்டால், இந்த வளாகம் அடிக்கடி வெள்ளப்பெருக்கு மற்றும் அணுக முடியாததாக இருக்கும். இதன் விளைவாக தொடர்ச்சியான பழுதுபார்ப்பு செலவுகள் ஏற்படும். அத்தோடு ஒதுக்கப்பட்ட வளங்கள் வீணாகின்றமை தொடர்பில் கடுமையான கவலைகள் பின்னர் எழும்.

அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட தவறான தகவல்கள் குறித்தும் சங்கம் கவலை தெரிவித்தது. இது நிலையான மற்றும் பசுமையான வளர்ச்சிக்கான இலங்கையின் உறுதிப்பாட்டைக் குறை மதிப்பிற்கு உட்படுத்தும். திட்டத்தை உடனடியாக நிறுத்தி, தளம் தொடர்பாக இலங்கை கிரிக்கெட் அமைப்புக்கு வழங்கப்பட்ட வழிகாட்டுதலை விசாரிக்குமாறு அந்த அமைப்பு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது. அனைத்து மேம்பாட்டுத் திட்டமிடலிலும் சுற்றுச் சூழல் சட்டங்களைப் பின்பற்றவும், சுற்றுச்சூழல் மற்றும் சமூக நல்வாழ்வை கவனமாகக் கருத்தில் கொள்ளவும் அந்த அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

# அர்ச்சுனாவுக்குப் பிடியாணை



யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

போக்குவரத்து விதிகளை மீறி தமது வாகனத்தை நிறுத்தியமை மற்றும் புறக்கோட்டை பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்பட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கு இன்று கொழும்பு கோட்டை நீதிவான் முன்னிலையில் விசாரணைக்காக அழைக்கப்பட்டது.

அதன்போது, நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா நீதிமன் றத்தில் முன்னிலையாகியிருக்க வில்லை.

இதனையடுத்து நீதிவான் பிடியாணை உத்தரவை பிறப்பித்துள்ளார்.



## யாழ்தேவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரயில் வழித்தடத்தில் பாதுகாப்பற்ற கடவையின் ஊடாக மோட்டார் சைக்கிளில் சென்ற நபரே ரயிலுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளார்.

கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக்கி வந்த ரயிலுடனேயே மேற்படி நபர் மோதுண்டுள்ளார்.

இந்த விபத்தில் யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியைச் சேர்ந்த இரத்தினராசா கிருஷ்ணமோகன் (வயது 52) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





## யாழ்ப்பாணத்தை சுகாதார நகரமாக மாற்றும் திட்டம்:

# நடைமுறைக்குச் சாத்தியமான விடயங்களைச் செயற்படுத்துக!

## வடக்கு மாகாண ஆளுநர் பணிப்பு

யாழ்ப்பாணத்தை முன்மாதிரி சுகாதார நகரமாக மாற்றும் திட்டத்தில், வெறும் பேச்சுக்களை விடுத்து நடைமுறைச் சாத்தியமான விடயங்களை உடனடியாகச் செயற்படுத்த வேண்டும். அடுத்த கலந்துரையாடலுக்கு முன்னதாக, உறுதியான முன்னேற்றங்களைக் காண்பிக்கவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் திட்டவட்டமான பணிப்புரையை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் சுகாதார நகரத் திட்டம் தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல், உலக சுகாதார நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி கலாநிதி ராஜேஸ் பாண்டேவ் பங்கேற்புடன், நேற்று திங்கட்கிழமை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

கலந்துரையாடலை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஆளுநர்,

இந்தத் திட்டமானது யாழ்ப்பாண மாநகர சபை, யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம் மற்றும் வடக்கு மாகாண சபை ஆகியன ஒன்றிணைந்து முன்னெடுக்கும் ஒரு கூட்டு முயற்சியாகும்.

சிறந்த உட்கட்டமைப்பு, மருத்துவ நிபுணத்துவம் மற்றும் சமூக ஈடுபாடு ஆகியவற்றை ஒருங்கிணைத்து, யாழ்ப்பாணத்தை ஒரு 'முன்மாதிரி சுகாதார நகரமாக' மாற்றுவதே எமது இலக்காகும். இதில் நகரின் உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வுக காண்பதில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

உலக சுகாதார நிறுவனத்தின் பிரதிநிதி ராஜேஸ் பாண்டேவ் கருத்துத் தெரிவிக்கையில்,

'வடக்கு மாகாணத்தில் அண்மையில் ஏற்பட்ட பேரிடரின் பின்னரான சூழலை நான் நேரில் அவதானித்தேன். ஒரு சுகாதார நகரத் திட்டமானது மக்களின் பங்கேற்புடனேயே முழுமையடையும். சமூகத்தின் தேவைகள் என்ன? எது சாத்தியம்? என்பது குறித்து மக்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றே இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டினார்.

இந்தத் திட்டம் குறித்துப் பலமுறை பேசப்பட்டாலும், பல விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்ற தகவல் வெளியிடப்பட்டது.

ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் யாழ். மாநகர சபைக்கும், கனடாவின் ரொரன்ரோ மாநகரத்துக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

நீண்ட காலத் தேவைகள் ஒருபுறமிருக்க, உடனடியாகச் செய்யக் கூடிய வேலைகளையும் தாமதப்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்த ஆளுநர், விரைவான நடைமுறைப்படுத்தலுக்காக உப குழுவொன்றை அமைப்பது குறித்தும் ஆலோசனை வழங்கினார்.

செயற்பாட்டுப் பட்டியலில் உள்ள சாதாரண விடயங்களை அடுத்த கூட்டத்துக்கு முன்னதாகவே நடைமுறைப்படுத்தி முடிக்க வேண்டும் எனவும் அதிகாரிகளுக்குக் காலக்கெடு விதித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாநகர சபை முதல்வர், ஆளுநரின் செயலாளர், யாழ். மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் பாடசாலை அதிபர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.








# ஜனாதிபதியின் நிவாரண நிதியத்துக்கு நிதியுதவி அளித்த கார்மேல் பற்றிமா!

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையில் 2000 ஆம் ஆண்டு கல்வி கற்ற பழைய மாணவர்கள் ஒரு குழுவாக ஒன்றாக இயங்கும் Y2k குடும்பம் எனும் அமைப்பு அண்மைக் காலமாகப் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இதற்கமைய அண்மையில் நாட்டில் ஏற்பட்ட டித்வா புயல் காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகள் பாதிக்கப்பட்டு தற்போது மக்கள் மீண்டு வருகின்றனர்.

குறித்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக ஜனாதிபதியின் நிவாரண நிதியம் அண்மையில் உருவாக்கப்பட்டிருந்தது.

இதற்கிணங்க ஜனாதிபதியின் நிவாரண நிதிய கணக்கிலக்கத்துக்கு இன்று 2 லட்சத்தி ஐம்பதாயிரம் ரூபாவைக் குறித்த அமைப்பு மருதமுனையில் உள்ள மக்கள் வங்கிக் கிளையில் வைப்புச் செய்துள்ளனர்.

அத்துடன் அதற்கான பற்றுச்சீட்டு உள்ளிட்ட முக்கிய ஆவணங்களை கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ஏ.ஜே. அதிசயராஜிடம் உத்தியோக பூர்வமாக இன்று கையளித்துள்ளனர்.





# பெரிய நீலாவணை முதல் சாய்ந்தமருது வரை சட்டவிரோத நிர்மாணங்களை அகற்ற கோரிக்கை

(பாறுக் ஷிஹான்)

டித்வா புயல் ஓய்ந்த பின்னரும் பல்வேறு பிரச்சினைகளை கல்முனை மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகள் எதிர்கொண்டுள்ளன.

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் திண்மக்கழிவுகள் தேங்கி துர்நாற்றம் வீசுவதுடன் இந்தக் குப்பைகள் சுழற்சி முறையில் படிப்படியாக அகற்றப்பட்டு வருகின்றன.

அத்துடன் டித்வா புயல் காரணமாக கரையை நோக்கி இழுத்துப் பாதுகாப்பாக வைக்கப்பட்ட படகுகள், தோணிகள் என்பன இன்னும் பொதுமக்கள் பயணம் செய்யும் பாதைகளை ஆக்கிரமித்துள்ளன.

இவ்வாறு ஆக்கிரமித்துள்ள படகு தோணி உரிமையாளர்கள் படிப்படியாக குறித்த படகுகள் தோணிகளை அகற்றி வருகின்றனர்.எனினும் அந்தப் பகுதியில் இடம்பெறும் மண் அரிப்பின் காரணமாக பாதுகாப்பின் நிமிர்த்தம் மீண்டும் தங்கள் படகு தோணிகளை பிரதான பாதைகளின் இரு மருங்கிலும் வைத்து வருகின்றனர்.

இவை தவிர பெரிய நீலாவணை முதல் சாய்ந்தமருதுவரை கடற்கரை ஓர வீதி பகுதியில் எவ்வித அனுமதி இன்றியும் பொதுப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சில மீனவர்கள் செயற்பட்டு வருகின்றனர். பிரதான சந்திகள் மற்றும் மக்கள் செல்லும் பாதைகளை ஆக்கிரமித்து மோட்டார் வாகனம் திருத்துமிடம் மீன் விற்பனை நிலையங்களை அமைத்துள்ளனர்.

இதனால் அப்பகுதியில் பொதுப் போக்குவரத்து தடைப்படுவதுடன் அண்மைக்காலமாக விபத்துக்களும் ஏற்பட்டு வருகின்றன. இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்ச்சியாக இந்தப் பகுதிகளில் எவ்வித அனுமதி இன்றி மேற்கொள்வதால் பொதுப்போக்குவரத்து வெகுவாக பாதிக்கப்பட்டு வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இந்த விடயத்தில் உரிய நடவடிக்கை மேற்கொண்டு தற்காலிகமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மீன் விற்பனை நிலையங்கள் உள்ளிட்ட சட்டவிரோத நிர்மாணங்களை அகற்ற முன்வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



# திருமலை மாநகர சபையின் பாதீடு ஏகமனதாக நிறைவேற்றம்!

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாநகர சபையின் பாதீடு ஏகமனதாக இன்று நிறைவேற்றப்பட்டது. மாநகர முதல்வர் க.செல்வராஜாவால் சமர்ப்பிக்கப்பட்ட 2026 ஆம் ஆண்டுக்கான இந்தப் பாதீடு மாநகர சபையின் முதலாவது பாதீடாகும்.

மாநகர சபையின் பாதீடு சபையின் முதல்வர் க.செல்வராஜா, மாநகர ஆணையாளர் உ.சிவராசா மற்றும் செயலாளர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இன்று சபைக்கு முன்வைக்கப்பட்டது.

முன்வைக்கப்பட்ட பாதீட்டை தமிழரசுக் கட்சி உறுப்பினர் அஜித்குமார் முன்மொழிந்தார். அதனை தமிழரசுக் கட்சியின் மற்றுமொரு உறுப்பினரான குமாரகுலசிங்கம் வழிமொழிந்தார். அதனை சபையின் அனைத்து உறுப்பினர்களும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர்.

25 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் இன்று 20 உறுப்பினர்கள் சமூகமளித்தனர். தமிழரசுக் கட்சி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் சுயேட்சைக்குழு உறுப்பினர் ஆகியோர் கலந்து கொண்டிருக்கவில்லை.சுகவீனம் மற்றும் தனிப்பட்ட விடயங்கள் காரணமாக அவர்கள் கலந்து கொண்டிருக்கவில்லை எனவும் அறியமுடிகின்றது.

இந்த நிலையில் சுயேட்சைக்குழு உறுப்பினர் ஒருவர் சுகவீகமான நிலையில் சபை நடவடிக்கை நிறைவுபெற்ற பின்னர் தாமதமாக வருகை தந்ததை காண முடிந்தது. அதேபோன்று தமிழரசுக் கட்சி உறுப்பினர் ஒருவரும் தாமதமாக வருகை தந்திருந்தார்.



# அரசியல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கை தொடர்பில் காங்கிரஸ் மத்திய குழு சந்திப்பு!

காத்தான்குடி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழு உறுப்பினர்களுக்கும், கட்சியின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, எதிர்கால அரசியல் மற்றும் சமூக நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது. அதன்படி, உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாக தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத் திட்டங்கள் குறித்தும், எதிர்வரும் காலங்களில் அரசின் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி மற்றும் நலன்புரித் திட்டங்கள் தொடர்பாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் விளக்கங்களை வழங்கினார்.



அண்மையில் ஏற்பட்ட அனர்த்தங்களின்போது களப்பணிகளில் ஈடுபட்ட மத்திய குழு உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், காத்தான்குடி நகர சபைத் தவிசாளர், உப தவிசாளர், உறுப்பினர்கள், மண்முனைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்கள், அமைப்பாளர்கள், முக்கியஸ்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# வாழைச்சேனை ஆழ்கடல் மீனவரின் நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வு!

## நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு நடவடிக்கை

**(மட்டக்களப்பு நிருபர்)**

வாழைச்சேனை ஆழ்கடல் மீனவர்களின் நீண்ட கால பிரச்சினைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு மூலம் தீர்வு காணப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனை பகுதியில் ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் படகுகளின் பாதுகாப்பு, மற்றும் அமைவிடம், பயணிக்கும் வேகம், உட்பட சகல விவரங்களையும் துல்லியமாகத் தானியங்கி மூலம் வெளிப்படுத்தும் சிறப்பு கண்காணிப்பு கருவிகள் பொருத்தப்படாமையால் பல்வேறு சிரமங்களையும் இழப்புக்களையும் அந்தப் பகுதி மீனவர்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பிலும், வாழைச்சேனை பிராந்திய மீனவர்கள் எதிர்கொள்ளும் ஏனைய சவால்கள் தொடர்பிலும் மீனவ அமைப்பால் நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபுவின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டதை



அடுத்து அவரின் முயற்சியால் அந்தப் பகுதி மீனவர்களின் கோரிக்கையை கடற்றொழில் அமைச்சின் மூலம் நிவர்த்தி செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதேச அபிவிருத்தி குழு தலைவருமான க.பிரபுவின் இந்த முயற்சி காரணமாக மீனவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் அதேவேளை இலங்கை மீனவர்கள் உரிய கடற்பரப்பை மீறி பயணிக்காமலும், சட்ட விதிகளை மீறாமலும், துறைசார் அதிகாரிகளின் நேரடி கண்காணிப்பு மற்றும் ஒழுங்கமைப்பில் மீன்பிடித் தொழிலை மீனவர்கள் முன்னெடுப்பார்கள் என்று மீனவர் சங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

தம்மிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் அமைச்சர் உட்பட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி இரு தரப்பு கலந்துரையாடல் ஒன்றினையும் ஒழுங்கு செய்த அதேவேளை இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தொடர் முயற்சி வெற்றி அடைந்துள்ளதாகவும், எதிர்வரும் ஆண்டு ஜூன் மாத இறுதிக்குள் படகுகளுக்கு கண்காணிப்பு சாதனம் பொருத்துவதற்கு அவகாசம் வழங்கப்படும் அதேவேளை, பாதுகாப்பு சாதனம் மற்றும் பதிவு இன்றி உள்ள படகுகளுக்கும் சலுகை அடிப்படையில் குறைந்தது 75 சதவீத மானிய வசதிகளை அமைச்சு மூலமாக ஏற்படுத்தி கொடுப்பதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்துள்ளார்.



# மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழப்பு

**(உடப்பு க.மகாதேவன்)**

ஓபநாயக்கவில் உள்ள பொஜுன் விடுதிக்கு அருகாமையில் உள்ள பாலம் அருகே இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார். வீதியில் இருந்து மோட்டார் சைக்கிள் சறுக்கி கவிழ்ந்ததில் அந்த இளைஞர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.



# குடத்தனை வடக்கு மக்களால் முல்லை மக்களுக்கு நிவாரணம்

(பூ.லின்ரன்)

குடத்தனை வடக்கு மக்களால் முல்லை மக்களுக்கு நிவாரண உதவி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக இலங்கை முழுவதும் பல பகுதிகள் முற்றாக பாதிக்கப்பட்ட நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்திலும் அதிகளவான இடங்கள் பாதிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நோக்கில் குடத்தனை வடக்கு தாயகத்திலும் புலம்பெயர் நாட்டிலும் வாழும் மக்கள் இணைந்து பெருந்தொகையான பணம் சேகரிக்கப்பட்டு பல பகுதிகளில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் இன்று முல்லைத்தீவு குமுள முனை கிழக்கு பகுதியில் அதிகமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களை கிராம உத்தியோகத்தரின் தெரிவின் அடிப்படையில் 100 குடும்பங்களுக்கு குடத்தனை வடக்கு மக்களின் நிதி உதவியில் 5 லட்சம் ரூபா பெறுமதியான நிவாரண உதவி வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கிராமத்தின் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் குமுளமுனை கிழக்கு கிராம உத்தியோகத்தர் மற்றும் இளைஞர்கள் குடத்தனை வடக்கு மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# பண்டிகைக் காலத்தை முன்னிட்டு மன்னாரில் சுகாதார துறை நடவடிக்கை

(மன்னார் நிருபர்)

மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பல்வேறு உணவகங்கள், சிற்றுடிச் சாலைகள், வீதி உணவகங்கள் மீது மன்னார் பொது சுகாதார பரிசோதகர்கள் இணைந்து பல்வேறு ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக பண்டிகை காலம் என்பதன் அடிப்படையில் அதிகளவான சுகாதாரமற்ற உணவுகள் மற்றும் சிற்றுண்டிகள் விற்பனை செய்யப்படுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைவாக குறித்த ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மன்னார் நகரசபை பகுதியில் பண்டிகை கால நடைபாதை வியாபார நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள சிற்றுண்டி மற்றும் ஐஸ்கிறீம் விற்பனை நிலையங்கள் மீதும் சுகாதாரத்துறையினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.



மன்னார் நகர் பகுதியில் சுகாதார மற்ற முறையில் உணவுகளை தயாரித்து அசுத்தமாக உணவு தயாரிக்கும் பகுதியை வைத்திருந்ததோடு சூடான உணவுகளை சுகாதார விதிமுறைகளை மீறி பிளாஸ்டிக் வாளியில் களஞ்சியப்படுத்தி இருந்த உணவகம் ஒன்றின் மீது சுகாதார துறை சட்ட நடவடிக்கை மேற்கோண்டுள்ளதோடு குறித்த உணவுகளையும் பயன்படுத்த முடியாத வகையில் அழித்துள்ளனர்.

பண்டிகைக்கால தெருவோர உணவகங்கள் மற்றும் சிற்றுண்டி விற்பனை நிலையங்களில் உணவுகளை வேண்டி உட்கொள்வோர் அவதானத்துடன் செயற்படுமாறு சுகாதார துறையினர் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



# கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்திக்கு ஸ்மார்ட் வகுப்பு

வலிகாமம் கல்வி வலயத்தின் ஆரம்பக் கல்விப் பாடசாலைகளில் செயற்றிறன் மிக்கதொரு பாடசாலையாக மல்லாகத்தில் அமைந்துள்ள கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம் விளங்கி வருகிறது. இந்தப் பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கு மிகவும் தேவையான திறன்பலகை ஒன்றை அனைத் துலக மருத்துவ நல அமைப்பு வழங்கியதுடன் ஆசிரியர்களுக்கான பயிற்சியையும் ஒழுங்குபடுத்தியது.

திறன்பலகைக் கற்றல் நிகழ்வு சம்பிரதாய முறையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. நிகழ்வில் பாடசாலை அதிபர், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் பிரதிநிதி முத்து இராதாகிருஷ்ணன், இணைப்பாளர் துஷாந்தன் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் பங்குபற்றி சிறப்பித்தனர்.

கலாநிதி ஆறுதிருமுருகன் தனது ஆசியுரையில் அனைத்துலக மருத்துவ நல அமைப்பு மற்றும் ரட்ணம் நிதியம் ஆகிய நலநோன்பு நிறுவனங்களின் அளப்பரிய சேவையைப் பாராட்டினார். சிறப்பாக இந்தப் பாடசாலைக்குத் திறன் பலகையை வழங்கியுள்ள டாக்டர் ஈஸ்வரன் வேலாயுதபிள்ளை கொடைக்கு நன்றியும் கூறினார்.

தொடர்ந்து அதிபரின் உரையுடன் ஆசிரியர்கள், மாணவர்களுடன் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டனர். மாணவர்களின் உற்சாகமான கற்றல் இந்தத் திறன் வகுப்பறையின் நோக்கத்தை நிறைவு செய்வதாக அமைந்தது.

அனைத்துலக மருத்துவ நல அமைப்பு பிரதிநிதியின் கற்றல் செயற்பாடு பற்றிய விவரமான ஆலோசனையுடன் விழா நிறைவுற்றது.






# இந்து விரோத தி.மு.கவுக்கு மக்கள் பாடம் புகட்டுவார்கள்

## தமிழக பா.ஜ.க. தெரிவிப்பு




"முருகன் மீது நம்பிக்கையில்லாத முதல்வரோடு முருகன் எப்படி கைகோப்பார், இந்து விரோத தி.மு.க. அரசுக்கு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்."

– இவ்வாறு பா.ஜ.க. மாநில செய்தித் தொடர்பாளர் ஏ.என்.எஸ்.பிரசாத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்,

கடந்த 2022 ஆம் ஆண்டு சென்னையில் நடந்த நத்தார் விழாவில் பேசிய துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், 'நானும் ஒரு கிறிஸ்துவன் தான். கிறிஸ்துவன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை கொள்கிறேன். இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு அல்லேலுயா சொல்கிறார். உதயநிதி நான் கிறிஸ்தவன் எனச் சொல்கிறார் என்று சிலருக்கு நிச்சயம் வயிறு எரியவே செய்யும். நான் காதலித்து மணந்ததும் கிறிஸ்துவ மத்தை சேர்ந்தவர் தான்' என்றார்.

அப்போது தன்னை கிறிஸ்தவர் என்று சொன்ன உதயநிதி, இப்போது தி.மு.கவே கிறிஸ்தவ கட்சிதான் எனப் பேசியிருக்கிறார். மதுரையில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் பேசிய உதயநிதி ஸ்டாலின், 'கிறிஸ்தவ கொள்கைகளுக்கும் தி.மு.க. கொள்கைகளுக்கும் பெரிய வேறுபாடு கிடையாது. இரண்டுமே மனித நேயம், சமத்துவத்தை மக்களிடம் போதிக்க வேண்டும். சாதாரண மனிதரும் மக்கள் தலைவராக முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியவர் இயேசு கிறிஸ்து.'என்று கூறியிருக்கிறார்.

கிறிஸ்துவ மதம், இயேசு கிறிஸ்துவின் சிறப்புகள் பற்றி உதயநிதி ஸ்டாலின் பேசியதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. அதை வரவேற்கிறோம். கட்டாய மதமாற்றத்தையும், பயங்கரவாதத்தையும் மட்டுமே பா.ஜ.க. எதிர்க்கிறது. அனைத்து மதங்களையும் சமமாக மதிக்கும் கட்சி பா.ஜ.க. அதே நேரத்தில், 'கிறிஸ்தவ கொள்கைகளுக்கும் தி.மு.க. கொள்கைகளுக்கும் பெரிய வேறுபாடு கிடையாது.' என்பதன் மூலம் உதயநிதி என்ன சொல்ல வருகிறார்.

இதுவரை தி.மு.கவை மதச்சார்பற்ற கட்சி என்றும், தங்களை நாத்திகர்கள் என்றும் கூறி வந்த தி.மு.கவும், உதயநிதி ஸ்டாலினும் மதம் மாறி விட்டார்களா, கடந்த சில ஆண்டுகளாக கொஞ்சம் கொஞ்சமாக தனது அடையாளத்தை வெளிப்படுத்தி வரும் உதயநிதி, மீதி உண்மையையும் சொல்லிவிட்டால் நல்லது.

'சாதாரண மனிதரும் மக்கள் தலைவராக முடியும் என்பதை நிரூபித்து காட்டியவர் இயேசு கிறிஸ்து' என்றும் உதயநிதி ஸ்டாலின் பேசியது 100 சதவீதம் சரிதான். ஆனால், தி.மு.க. தலைமைப் பதவிக்கு கருணாநிதி குடும்பத்தை தவிர, இப்போது ஸ்டாலின் குடும்பத்தைத் தவிர வேறு யாரும் பதவிக்கு வர முடியாது. ஸ்டாலின் குடும்பத்து ஆண் வாரிசுகள் மட்டுமே தலைமை பதவிக்கு வர முடியும். தி.மு.கவில் சாதாரண மனிதர்கள் யாரும் தலைவர் பதவிக்கு கனவுகூட காண முடியாது. இந்த உண்மையையும் உதயநிதி சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத் தூணில் தீபம் ஏற்ற சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டும், அதை செயல்படுத்த மறுக்கிறார். கோயில் பணத்தில் கோயில்களுக்கு எதிராக வழக்கறிஞர்களை வைத்து வாதிடுகிறார். திருப்பரங்குன்றம் விவகாரத்தில் தி.மு.கவின் இந்து விரோதப் போக்கு அம்பலப்பட்டு விட்டதால், முதல்வர் ஸ்டாலினோடு முருகன் கைகோர்த்துள்ளார் எனப் பேசி முருகப்பெருமானை அவமதித்துள்ளார்.

தமிழ்க் கடவுள் என போற்றப்படும் முருகப் பெருமான் மீது நம்பிக்கை இல்லாதவர் முதல்வர் ஸ்டாலின். அப்படிப்பட்டவரோடு முருகன் எப்படி கைகோப்பார். இப்போது இந்துக்கள் விழிப்புணர்வு பெற்று வருகிறார்கள். நடப்பது அனைத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்து விரோத தி.மு.க. அரசுக்கு உரிய நேரத்தில் தக்க பாடம் புகட்டுவார்கள்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# எதிர்வரும் 2026 தேர்தலில் நான் போட்டியிடவில்லை!

## சரத்குமார் தகவல்



என் பின்னால் இருப்பவர்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்பதால் வரும் தேர்தலில் போட்டியிடவில்லை என்று நடிகரும், பா.ஜ.க. நிர்வாகியுமான சரத்குமார் தெரிவித்துள்ளார்.

பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியில் கலைத் திருவிழா நடைபெற்றது. இந்த விழாவில் 'கொம்பு சீவி' திரைப்பட குழுவினர் பங்கேற்றனர். கல்லூரி முதல்வர் அருட்தந்தை காட்வின் ரூபஸ் தலைமை வகித்தார். அதிபர் அருட்தந்தை இன்னாசிமுத்து ஆசியுரை வழங்கினார். மாணவர் மன்ற தலைவர் ஆரோக்கியதாஸ் வரவேற்றார்.

செயலர் எல்.லாசர் மற்றும் துணை முதல்வர் லூர்துசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதில் 'கொம்புசீவி' திரைப்படத்தின் கதாநாயகன் சண்முக பாண்டியன், நடிகர் சரத்குமார் திரைப்படத்தின் இயக்குநர் பொன்ராம், தயாரிப்பாளர் முகேஷ் டி.செல்லையா உள்ளிட்ட திரைப்பட குழுவினர் பங்கேற்றனர்.

இந்த விழாவைத்தொடர்ந்து பத்திரிகையாளர்களை சந்தித்த நடிகர் சரத்குமார்,

"என் பின்னால் இருப்பவர்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்பதால் வரும் தேர்தலில் போட்டியிடவில்லை. 100 நாள் வேலை வாய்ப்பு 125 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது" என்றார்.

மேலும், "விஜய்யை விட பெரிய அரசியல் கட்சியினர் நிறைய பேர் உள்ளனர். அவர்கள் குறித்து கேள்வி எழுப்பினால் பதில் அளிக்க தயாராக உள்ளேன்" என விஜய் குறித்த கேள்விகளை தவிர்த்தார்.




# புலம்பெயர் மக்கள் தாமாகவே வெளியேற உதவித்தொகையை அறிவித்த அமெரிக்கா

அமெரிக்காவில் ஆவணமற்ற புலம்பெயர் மக்கள் தாங்களாகவே தங்கள் சொந்த நாடுகளுக்குத் திரும்புவதை ஊக்குவிக்கும் நோக்கில், அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை ஒரு புதிய சலுகையை அறிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டு இறுதிக்குள் CBP ஹோம் மொபைல் செயலி மூலம் தாங்களாகவே நாடு திரும்புவதற்குப் பதிவு செய்யும் புலம்பெயர்ந்தோருக்கு, 3,000 டொலர் உதவித்தொகையுடன், இலவச விமானப் பயணமும் வழங்கப்படும்.

மட்டுமின்றி, நாட்டில் அதிக காலம் தங்கியிருந்ததற்காகவோ அல்லது நாட்டை விட்டு வெளியேறத் தவறியதற்காகவோ விதிக்கப்பட்ட எந்தவொரு அபராதங்கள் அல்லது தண்டனைகளிலிருந்தும் குறித்த திட்டத்தில் இடம்பெறுபவர்கள் மன்னிப்புப் பெறத் தகுதியுடையவர்கள் என்றும் அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் ஆவணமற்ற குடியேறிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான விரிவான முயற்சியின் ஒரு பகுதியே இந்த ஊக்கத் தொகை என்று உள்நாட்டுப் பாதுகாப்புத் துறைச் செயலாளர் கிறிஸ்டி நோம் கூறியுள்ளார்.

ஜனவரி 2025 முதல், 1.9 மில்லியன் ஆவணமற்ற புலம்பெயர்ந்தோர் தானாக முன்வந்து சுயமாக வெளியேறியுள்ளனர், மேலும் பல்லாயிரக்கணக்கானோர் CBP திட்டத்தைப் பயன்படுத்தியுள்ளனர் என்றும் கிறிஸ்டி நோம் ஒரு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தகுதியுள்ள நபர்கள் இந்த வாய்ப்பு ஆண்டின் இறுதியில் காலாவதியாவதற்குள் பயன்படுத்திக்கொள்ளுமாறும் வலியுறுத்தப்படுகிறது.

இதனிடையே, சுயமாக வெளியேற முடிவு செய்யாத புலம்பெயர்ந்தோர் கைது செய்யப்பட்டு, கட்டாயமாக வெளியேற்றப்படுதல் மற்றும் அமெரிக்காவிற்குள் மீண்டும் நுழைவதற்கு நீண்ட காலத் தடை போன்ற விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

# மூதாட்டியின் சடலத்தை விமானத்தில் ஏற்ற முயற்சி

## பிரித்தானிய குடும்பம் மீது குற்றச்சாட்டு



உயிரிழந்த மூதாட்டியை விமானத்தில் ஏற்ற முயன்றதாக பிரித்தானிய குடும்பத்தின் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

டிசம்பர் 18 அன்று, ஸ்பெயினின் மலகா நகரிலிருந்து லண்டனின் கேட்விக் நோக்கிப் பறக்க இருந்த ஈசி ஜெட் விமானத்திற்குள், 89 வயது மூதாட்டியின் உடலை பிரித்தானிய குடும்பம் ஒன்று கொண்டு வந்தமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

விமான நிலைய ஊழியர்களிடம் மூதாட்டி உடல் நலம் சரியில்லாமல் இருப்பதாகவும், அவர் சோர்வாக இருக்கின்றார் எனவும் குறிப்பிட்டு சக்கர நாற்காலியில் மூதாட்டியின் உடலத்தை அந்த குடும்பத்தினர் விமானத்தில் ஏற்றியுள்ளனர்.

ஆனால் நேரில் பார்த்த சக பயணிகள் மற்றும் விமானப் பணிப் பெண்கள் சந்தேகமடைந்து, மூதாட்டி அசைவின்றி இருப்பதாக விமானிக்கு தகவல் தெரிவித்தனர்.

இதனால், விமானம் மீண்டும் விமான நிலையத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டது.

அங்கு விமான நிலையத்தில் அவசர கால மருத்துவக் குழுவினர் மூதாட்டியைப் பரிசோதனை செய்து அவர் இறந்துவிட்டதை உறுதி செய்தனர்.

இந்நிலையில் ஈசி ஜெட் விமான நிறுவனம் வழங்கிய தகவலில், சம்பந்தப்பட்ட பிரித்தானிய குடும்பத்தினர் மூதாட்டி பயணம் செய்யத் தகுதியானவர் என்ற முறையான மருத்துவ சான்றிதழை வைத்து இருந்ததால் விமானத்திற்குள் அனுமதிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளது.

இருப்பினும் உடல் நலம் பாதிக்கப்பட்டவர்கள் அனுமதிக்கப்படும் நடைமுறைகளை விமான நிறுவனம் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என அழுத்தம் அதிகரித்துள்ளது.

இதற்கிடையில் இந்த குழப்பத்தால் விமானம் 12 மணி நேரம் தாமதமாகப் புறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# அமெரிக்கா – டென்மார்க் இடையே ஏற்பட்டுள்ள இராஜதந்திர நெருக்கடி

உலகின் மிகப்பெரிய தீவான கிரீன்லாந்தை அமெரிக்காவுடன் இணைக்கும் தனது நீண்டகால விருப்பத்தை நிறைவேற்றும் வகையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அந்நாட்டிற்கு ஒரு விசேட தூதுவரை நியமித்துள்ளார்.

ட்ரம்ப்பின் இந்த தன்னிச்சையான நடவடிக்கை டென்மார்க் மற்றும் கிரீன்லாந்து ஆகிய நாடுகளிடையே பெரும் இராஜதந்திர நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

லூசியானா மாகாண ஆளுநர் ஜெஃப் லேண்ட்ரி என்பவரையே கிரீன்லாந்திற்கான விசேட தூதுவராக ட்ரம்ப் நேற்று முன்தினம் அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து சமூக ஊடகத்தில் பதிவிட்ட லேண்ட்ரி,

“கிரீன்லாந்தை அமெரிக்காவின் ஒரு பகுதியாக மாற்றும் இந்த கௌரவமான பணியை ஏற்றுக்கொள்வதில் மகிழ்ச்சி” எனத் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில், தனது இறையாண்மைக்கு அச்சுறுத்தல் விடுக்கும் இந்த நடவடிக்கையை டென்மார்க் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது குறித்து விளக்கம் கோருவதற்காக அமெரிக்க தூதுவருக்கு டென்மார்க் வெளிவிவகார அமைச்சு அவசர அழைப்பு விடுத்துள்ளது.

“சர்வதேச சட்டங்களின்படி எல்லைகளையும் இறையாண்மையையும் மதிக்க வேண்டும் ஒரு நாட்டை மற்றொரு நாடு இணைத்துக்கொள்ள முடியாது” என டென்மார்க் பிரதமர் மெட்டே பிரடெரிக்சன் எச்சரித்துள்ளார்.

“கிரீன்லாந்து அந்த நாட்டு மக்களுக்கே சொந்தமானது எமது எதிர்காலத்தை நாங்களே தீர்மானிப்போம்” என அந்நாட்டின் பிரதமர் ஜென்ஸ்-பிரடெரிக் நீல்சன் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, டென்மார்க்கின் ஒருமைப்பாட்டிற்கு முழு ஆதரவு வழங்குவதாக ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் அறிவித்துள்ளார்.

சுமார் 57,000 மக்கள் வாழும் கிரீன்லாந்து, டென்மார்க்கின் ஒரு பகுதியாக இருந்தாலும் விரிவான சுயாட்சி அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

எனினும் அதன் பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கைகள் டென்மார்க்கின் வசமே உள்ளன.

கிரீன்லாந்தில் உள்ள அபரிமிதமான கனிம வளங்கள் மற்றும் அதன் முக்கிய இராணுவ அமைவிடம் காரணமாக, அதனை விலைக்கு வாங்க ட்ரம்ப் 2019 ஆம் ஆண்டிலேயே முயற்சி செய்திருந்தார்.

தற்போது மீண்டும் ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ள நிலையில், இந்த முயற்சியில் அவர் தீவிரமாக இறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் - 3

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 23/12/2025

## போலி நாணயத் தாள்கள் தொடர்பில் சில்லறை விற்பனைப் பேரவை எச்சரிக்கை

C2 ▶





# கனடாவின் பல பகுதிகளில் இந்த முறை வெள்ளை நத்தாருக்கு சாத்தியம் குறைவு

கனடாவில் இந்த ஆண்டு வெள்ளை நத்தாரை (White Christmas) எதிர்பார்க்கும் கனடியர்கள் தங்களின் எதிர்பார்ப்புகளை சற்று மாற்றிக் கொள்ள வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

வானிலை முன்னறிவிப்புகளின் படி, தெற்கு ஒன்டாரியோ உள்ளிட்ட சில பகுதிகளில் நத்தார் நாளில் நிலத்தில் பனி படர வாய்ப்பு குறைவாக உள்ளது.

இந்த முறையில் வானிலை C2 ▶

# கனடாவின் சர்ரேவில் வாகனத்திலிருந்து எரிந்த நிலையில் இரு சடலங்கள் மீட்பு



கனடாவின் சர்ரே பகுதியில் வாகமொன்றிலிருந்து எரிந்த நிலையில், இரண்டு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

வாகனம் தீப்பிடிப்பு சம்பவத்தில் இரண்டு பேரும் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

102 அவென்யூ – 12200 பிளாக் பகுதியில் உள்ள ஒரு வீட்டிற்கு அருகாமையில் நிறுத்தப்பட்டிருந்த பயண டிரெய்லரில் தீப்பிடித்ததாக தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து, சர்ரே பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர்.

அப்போது தீயணைப்புப் படையினர் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அந்த பொழுது போக்கு வாகனத்தின் உள்ளே இரண்டு நபர்கள் உயிரிழந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டனர் என சர்ரே பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த தீ விபத்திற்கான காரணம் இன்னும் உறுதியாகத் தெரியவில்லை. சம்பவம் தொடர்பாக பொலிஸ /ம் தீயணைப்புப் பிரிவும் இணைந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றன.

தீ பரவல் காரணமாக அருகிலுள்ள ஒரு வீட்டிலிருந்தவர்கள் முன்னெச்சரிக்கையாக அகற்றப்பட்டுள்ளனர்.

பின்னர் நிலைமை கட்டுக்குள் வந்ததைத் தொடர்ந்து, அந்த வீட்டில் வசித்தவர்கள் பாதுகாப்பாக மீண்டும் திரும்ப அனுமதிக்கப்பட்டனர் என்றும் பொலிஸ் தெரிவித்துள்ளது.

இந்த தீ விபத்து தொடர்பாக தகவல் உள்ளவர்கள் பொலிஸாரை தொடர்புகொள்ளுமாறு பொலிஸ் கேட்டுக்கொண்டுள்ளது.




# போலி நாணயத் தாள்கள் தொடர்பில் சில்லறை விற்பனைப் பேரவை எச்சரிக்கை




கடந்த நவம்பர் மாதம் முதல் கனடாவில் 20, 50 மற்றும் 100 டொலர் மதிப்புள்ள போலி கனடிய நாணயத் தாள்கள் பரவல் கணிசமாக அதிகரித்துள்ளதாக கனடிய சில்லறை விற்பனை பேரவை எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த ஒரே ஒரு மாதத்தில் கண்டறியப்பட்ட போலி நாணயத் தாள்களின் எண்ணிக்கை, முந்தைய முழு ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட எண்ணிக்கையை விட அதிகமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

போலி நோட்டுகள் தயாரிக்கும் நபர்கள் தங்களின் தொழில்நுட்பங்களை மிகவும் மேம்படுத்தியுள்ளனர் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பயிற்சி பெற்ற கண்களுக்குக் கூட உண்மையான நோட்டுகளையும் போலி நோட்டுகளையும் வேறுபடுத்துவது கடினமாகி விட்டது.

ஹோலோகிராம்கள் கூட மிகத் துல்லியமாக உருவாக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது. இந்த போலி நாணயத் தாள் பரவல் கிறிஸ்துமஸ் பண்டிகை காலத்தை முன்னிட்டு அதிகரித்திருப்பது சாத்தியமானதென்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த காலத்தில் கடைகள் மிகவும் பரபரப்பாக இருக்கும். ஒரே நேரத்தில் பலர் வாங்குவதால், தவறுகளை கவனிப்பது கடினமாகிறது.

இதுவே போலி நோட்டுகளை சந்தையில் செலுத்த ஏற்ற நேரமாகிறது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த பிரச்சினையின் உண்மையான அளவு எவ்வளவு என்பது துல்லியமாகத் தெரியவில்லை என்றாலும், போலி நாணயத்தாள்கள் வெகுவாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

---

**கனடாவின் பல...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

கடவுள்கள் உதவப் போவதில்லை. டொராண்டோவில் வெள்ளை நத்தார் கிடைக்க வேண்டுமென்றால் கனவு காண்பதை விட பிரார்த்தனை செய்ய வேண்டிய நிலை, ஏற்பட்டுள்ளது என கனடிய சுற்றாடல் திணைக்கள ஆய்வாளர் டேவிட் பிலிப்ஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த 11 ஆண்டுகளில், டொராண்டோ பகுதிகளில் 8 ஆண்டுகள் 'பச்சை நத்தார்' (பனி இல்லாத கிறிஸ்துமஸ்) ஆகவே இருந்ததாகவும் அவர் நினைவூட்டினார்.

டொராண்டோ, விண்சர், ஹாமில்டன் போன்ற தெற்கு ஒன்டாரியோ நகரங்களில் பனி மூடிய நிலம் காணப்படும் வாய்ப்பு மிகவும் குறைவு என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இதற்கு மாறாக, ப்ரைரீஸ் மாகாணங்கள், வடக்கு ஒன்டாரியோ, கிழக்கு ஒன்டாரியோ, மற்றும் தெற்கு கியூபெக் பகுதிகளில் பனிப்பொழிவுடன் கூடிய நத்தார் கிடைக்கும் சாத்தியம் அதிகம் என வானிலை ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பொதுவாக வெள்ளை நத்தார் காணப்படும் பகுதிகளில் இந்த ஆண்டும் அது கிடைக்கும். சில இடங்களில் மட்டும் காத்திருக்க வேண்டியிருக்கும் என பிலிப்ஸ் தெரிவித்துள்ளார்.




# கனடாவில் விற்பனை செய்யப்பட்ட பிஸா பொப்ஸ் தொடர்பில் எச்சரிக்கை

கனடாவில் விற்பனை செய்யப்பட்ட பில்ஸ்பரி நிறுவனத்தின் சில வகை பிஸா பொப்ஸ் தயாரிப்புகள் நுண்ணுயிர் மாசுபாடு சந்தேகத்தால் சந்தையிலிருந்து மீட்கப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய உணவு பரிசோதனை முகவர் நிறுவனம் இந்த தகவல்களை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

பிஸா பொப்ஸ் பெப்பரோனி என்ட் பேகோன், பிஸா பொப்ஸ் சுப்ரிமோ எக்ஸ்ட்ரீம் பெப்பரோனி என்ட் பேகோன், மற்றும் பிஸா பொப்ஸ் பிரான்க் ரெட்ஹொட் பெப்பரோனி என்ட் பேகோன் போன்ற உற்பத்திகள் சந்தையிலிருந்து மீளப் பெற்றுக் கொள்ளப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தயாரிப்புகளில் ஈகொலி என்ற தீங்கான பாக்டீரியா மாசுபாடு இருக்கக்கூடும் என எச்சரித்துள்ளது.

இந்த உணவுப் பொருள்கள் வெளிப்படையாக கெட்டதாகத் தோன்றாமலும், வாசனை மாற்றமின்றியும் இருக்கலாம். ஆனால் அவை உடல்நல பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.



# டிசம்பர் மாதம் இறுதி வாரங்களில் இரத்த தான எண்ணிக்கை வீழ்ச்சி

டிசம்பர் மாதத்தின் இறுதி வாரங்களில் இரத்தம் மற்றும் பிளாஸ்மா தானம் வழக்கமாக குறைவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

கனடியர்கள் உடனடியாக இரத்த தானத்திற்கு முன்வர வேண்டும் என்று கனடிய இரத்த சேவை அழைப்பு விடுத்துள்ளது.

விடுமுறை காலத்திலும் நோயாளிகளின் தேவைகள் மாற்றமின்றி தொடர்வதால் இந்த நிலை கவலைக்கிடமானதாக உள்ளது.

ஆண்டு இறுதி பயணங்கள், அரச விடுமுறைகள் மற்றும் தினசரி நடைமுறைகளில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக தான மையங்களில் முன்பதிவுகள் குறைவதாக அமைப்பு தெரிவித்துள்ளது.

இரத்தப் பொருள்கள் நீண்ட நாள்கள் சேமிக்க முடியாதவை என்பதால், இந்த சவால் மேலும் தீவிரமடைகிறது. இந்த காலகட்டத்தில் மக்கள் வேலை, நண்பர்களுடன் கூடல் போன்ற பல பழக்கங்களை மாற்றிக் கொள்கிறார்கள்.

ஆனால் இரத்தம், பிளாஸ்மா மற்றும் பிளேட்லெட்களின் தேவை தொடர்ந்து உள்ளது என கனடிய இரத்த சேவையின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

புற்றுநோய் சிகிச்சை பெறும் நோயாளிகள் மற்றும் பெரிய அறுவை சிகிச்சைகளுக்குப் பின் உள்ளவர்கள் விடுமுறை நாள்களிலும் மருத்துவமனைகளில் தங்கியிருப்பதாகவும், அவர்கள் முழுமையாக தானமாக வழங்கப்படும் இரத்தப் பொருள்களையே நம்பியிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

விடுமுறைகளுக்கிடையிலான வாரங்கள் எங்களுக்கு மிகவும் சவாலான காலமாக இருக்கின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த ஆண்டில் கடுமையான காய்ச்சல் பரவல் மற்றும் எதிர்பார்க்க முடியாத குளிர்கால வானிலை போன்ற கூடுதல் அழுத்தங்களும் எதிர்கொள்ள நேரிட்டதாகத் தெரிவித்துள்ளார்.